## <u>சாட்சியின் வாக்குமூலம்</u>

## <u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

O.S.No. 98/2012

DW : 7 **திரு. ஐயப்பன் த/பெ. இரங்கநாதபிள்ளை**

**08.07.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | தொழில் | : |
| தந்தைபெயர் | : | கிராமம் | : |
| வயது | : | வட்டம் | : |

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

<u>நேரம்</u>

**முதல் விசாரணை**

நான் அத்திங்கிகாவனுரில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினர் நான் பிரதிவாதி தரப்பு சாட்சி 7 எனக்கு நீதிமன்த்தில் இருந்து அழைப்பானை வந்தது. நான் வெங்கல்குப்பம் கிராம நிர்வாக அலுவலராக இருந்து 2012 பணி ஓய்வுப்பெற்றுவிட்டேன். நான் 1984 முதல் 2012 வரை நான் கிராம நிர்வாக அலுவலராக வெவ்வேறு கிராமங்களில் பணிபுரிந்தேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த காலக்கட்டத்தில் புன்னப்பாக்கம் கிராம் பாகல்மேடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். பாகல்மேடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது வேணு மற்றும் அவர் சகோதரர் தன்ராஜ் என்னை அனுகினார்கள். வாய்மொழியாக நிலம் பாகப்பரிவினை செய்தார்கள் அவர்கள் பாகப்பரிவினையை பதிவு செய்யவில்லை. அவர்கள் வாய்மொழியாக பாகப்பரிவினை செய்யும் போது நான் உடன் இருந்தேன். சுமார் 20 வருடங்கள் முன்பதாக அவர்கள் வாய்மொழியாக பாகப்பரிவினை செய்தார்கள். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ஆசீர்வாதம் மற்றும் ஹரிதாஸ் எனக்கு தெரியும் அவர்கள் வேணுவின் வாரிசுகள் என்றால் சரிதான்.

மல்லிகா என்பவர் வேணுவின் மகள் என்றால் சரிதான். 2001 ல் வேணு தன்னுடைய மகள் மல்லிகா மற்றொரு மகள் அமுதாவிற்கு சொத்தை உயில் மூலமாக எழுதி அதை நான் அளந்துக்கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி சொத்தை அவர்கள் அனுபவித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. பாகல்மேடு கிராமத்தில் ரேஷன் (எ) வரதராஜுவை எனக்கு தெரியும். அவரிடம் 38 செண்ட் அமுதாவும் மல்லகாவும் விற்றுவிட்டார்களா என்று எனக்கு தெரியாது. வேணு மற்றும் அவர் சகோதரர்கள் நில வரி ரசீது வழங்கியுள்ளேனா என்றால் கிராமத்தில் உள்ள அனைத்து நில உரிமையாளர்களுக்கு நில வரி ரசீது வழங்குவது என்னுடைய கடமையாகும்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 1984 ஆம் வருடம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். எந்த வருடம் பாகல்மேடு மற்றும் புன்னப்பாக்கம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் வருடம் எனக்கு ஞாபகமில்லை. வேணு மற்றும் அவரின் சகோரர்கள் நாங்கள் சொத்து வாங்கியுள்ளோம் பட்டா மாற்றுங்கள் என்று என்னை அணுகினார்களா என்றால் இல்லை. சொத்து வேணு மற்றும் தன்ராஜின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்தை வாய்மொழியாக பிரித்து பயிர் செய்வதற்காக என்னை அணுகினார்கள். நாங்கள் இருவரும் வாய்மொழியாக பாகப்பரிவினை செய்துக்கொள்கிறோம் என்று அணுகவில்லை என்றாலும் தனித்தனியாக பயிர் செய்துகொள்கிறோம் என்று அணுகினார்கள் என்றால் சரிதான். அப்படி அவர்கள் அணுகும் போது வேணுவிற்கு மற்றும் அவரின் சகோதரருக்கு வாரிசுகள் இருந்தனர் என்றால் சரிதான். அவர்கள் பூர்வீக சொத்தை வாய்மொழியாக பாகப்பரிவினை செய்துக்கொள்ள எந்த சாத்தியகூறுமில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஒரு உயில் 2001 ல் எழுதுவதற்கான விவரங்கள் குறித்தோ அதை எதற்காக எழுதுகிறோம் என்ற காரணம் குறித்தோ என்னிடம் கூறினார்களா

என்றால் இல்லை. 20 வருடங்களுக்கு முன்பு என் முன்னிலையில் இருவரும் வாய்மொழியாக பாகப்பரிவினை செய்துக்கொண்டார்கள் என்பது தவறு என்றும் ஏனெனில் 2001 ஆம் வருடம் வேணு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு இந்த குடும்பத்தின் சொத்துகள் குறித்த பூர்வீக தன்மை தெரிந்ததினால் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாய்மொழியாக மற்ற வாரிசுகளை விட்டுவிட்டு பாகப்பரிவினை செய்வதற்கு எந்த முகாந்திரமுமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,